கேரளாவிலும் அரசின் உரையை முழுமையாக படிக்காத ஆளுநர்!

சட்டப்பேரவையிலேயே தனது எதிர்ப்பை பதிவு செய்த முதலமைச்சர்!

ஆளுநருக்கு முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

திருவனந்தபுரம், ஜன. 21 - கேரள சட்டமன்றத்திலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் தவிர்த்துள்ளதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய அரசு பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில், ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் சட்டமன்றத்தில் உரையாற்றும் ஆளுநர்கள், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல், தங்களது சொந்த கருத்துக்களை சேர்த்து உரையாற்றி வருகின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்புகளும், கண்டனங்களும் கிளம்பியுள்ளநிலையில், கேரளாவிலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தவிர்த்துள்ளார். இதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் சட்டப்பேரவையிலேயே தனது கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் பதிவு செய்தார்.

ஒன்றிய அரசை விமர்சித்துள்ள சில வரிகள் உட்பட பல்வேறு பகுதிகளை தனது உரையிலிருந்து ஆளுநர் தவி ர்த்துள்ளார் என்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். மாநில அமைச்சரவை ஒப்புதல் கொடுத்த உரையை ஆளுநர் முழுமையாக வாசிக்காதது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று பினராயி விஜயன் குற்றம்சாட்டியுள்ளார்.

உரிய நிதி வழங்காமல் ஒன்றிய அரசு கேரளாவை வஞ்சித்து வருகிறது என்றும், இந்த உண்மையை வாசிப்பதில் ஆளுநருக்கு என்ன தயக்கம் என்றும் பினராயி விஜயன் கேள்வி எழுப்பியுள்ளார். உரையில் ஆளுநர் தவிர்த்த பகுதிகள் அனைத்தும், அவைக்குறிப்பில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் - கழகத் தலைவர் பிறந்த நாள்!

இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஜன.21

இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க.செயற்குழுக் கூட்டம் வருகிற 22.1.2026 வியாழன் காலை 9 மணியளவில் கடலூர் காத்தாங்கடை என்.கே.பி. மஹாலில் இலத்தூர் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் பி.லோகநாதன் தலைமையில், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே இக் கூட்டத்திற்கு மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக முன்னோடிகள், பி.எல்.ஏ.2, எல்.எல்.சி., பி.டி.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திட வேண்டுகிறேன்.

பொருள்:

1) ஜனவரி 25 நாள் காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்

2) கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து

3) கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ் ஆர். கார்த்திகேயன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே; ஆர்.என்.ரவி, ஆளுநர் உரையைப் படிக்காமல், அரசமைப்புச்சட்டக் கடமையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, சட்டப் பேரவையிலிருந்து வெளியேறி இருக்கிறாரே ?

பெரியதம்பி : **ஆமாம் தம்பி; பூனை, கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போகுமோ? மியா,மியா!**

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசே பாராட்டியதை அறியாமல்

எதிர்க்கட்சித் தலைவர் போல் ஆளுநர் அறிக்கை விடுவதா?

அமைச்சர் தா.மோ. அன்பரசன் கேள்வி!

சென்னை, ஜன.21

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசே பாராட்டிய நிலையை அறியாமல், எதிர்க்கட்சி தலைவர் போல் தமிழ்நாடு ஆளுநர் அறிக்கை வெளியிடுவதா? என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் விடுத்துள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நேற்று (20.1.2026) வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் MSME நிறுவனங்கள் பெரும் அழுத்தத்தில் உள்ளதாகவும், தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனங்களை அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்லும் கட்டாயத்திற்கு தள்ளப்படுள்ளனர் என்றும், இந்தியாவில் 55 மில்லியன் MSME நிறுவனங்கள் பதிவு செய்துள்ளது எனவும், அதில், தமிழ்நாட்டில் 4 மில்லியன் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அவர்கள் எவ்வித ஆதாரம் இன்றியும், புள்ளி விவரங்கள் இல்லாமலும் தமிழகத்தில் உள்ள MSME நிறுவனங்களையும், தமிழ்நாடு அரசையும் அவமதிக்கும் வகையில் அவதூறுகளை அள்ளி வீசியுள்ளார்.

நேற்று (20.1.2026) வரை நாட்டில் 4,51,01,634 (45 மில்லியன்) MSME நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என ஒன்றிய அரசின் MSME துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் (https://dashboard.msme.gov.in) குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆளுநர் அவர்கள் 55 மில்லியன் MSME நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என எதை வைத்து கூறுகிறார் என தெரியவில்லை.

குஜராத் மாடல்!

இதே இணையதளத்தில், நாட்டில் குஜராத் மாடல் என்று அவர்களால் கூறப்படும் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே ஆட்சியில் உள்ள குஜராத் மாநிலத்தில் 29,13,816 MSME நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை விட பெரிய மாநிலமான உத்திரபிரதேசத்தில் 47,17,342 MSME நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஒன்றிய அரசின் எவ்வித உதவியும் இன்றி அரசியல் அழுத்தங்களையும் மீறி, தமிழ்நாட்டில் 40,13,701 MSME நிறுவனங்கள் பதிவு செய்துள்ள சூழலை உருவாகியுள்ளார் தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

MSME நிறுவனங்கள் என்பது அந்தந்த இடங்களில் கிடைக்க கூடிய மூலப்பொருட்களை ஆதாரங்களாக கொண்டு உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும், பெரு நிறுவனங்களுக்கு உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும் உள்ளதால், அந்நிறுவனங்கள் வெளிமாநிலங்களுக்கு செல்ல எவ்வித அவசியமும் இல்லை. எவ்வித ஆதாரங்களும் இன்றி குறை கூற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே மேதகு ஆளுநர் அவர்கள் குறைக் கூறியுள்ளார்.

ஆளுநர் அறிக்கையில், தமிழ்நாட்டில் MSME நிறுவனங்கள் பெரும் அழுத்தத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசின் பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி வரி, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளுடனான தவறான வெளியுறவுக் கொள்கைகளால் தமிழ்நாட்டில் உள்ள MSME நிறுவனங்கள் மட்டும் அல்ல: இந்தியாவில் உள்ள அனைத்து MSME நிறுவனங்களுமே பெரும் அழுத்தத்தில் உள்ளது.

கழக அரசு பொறுப்பேற்ற போது கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட MSME நிறுவனங்களை மீட்டெடுக்க, டாக்டர் என்.சுந்தரதேவன் (ஓய்வு) அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தியும், செயல்பாட்டில் உள்ள திட்டங்களில் சீர்த்திருத்தங்கள் செய்தும் MSME நிறுவனங்களை மீட்டெடுத்துள்ளார் முதல்வர் அவர்கள்.

வேலை வாய்ப்புகள்!

120க்கும் மேற்பட்ட உரிமங்களை ஒரே இடத்தில் பெற்று வழங்கும் ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0 திட்டத்தின் மூலம் 1,00,269 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 91,831 நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும். சுய தொழில் திட்டங்களான NEEDS, UYEGP, PMEGP, PMFME ஆகிய திட்டங்களு டன், சமுதாயத்தின் விளிம்பு நிலை மக்களையும் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட 6 திட்டங்களின் கீழ், கடந்த 4 ½ ஆண்டுகளில், ரூ.2,407.97 கோடி மானியத்துடன், ரூ.6,200.16 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு, 80,169 இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டு, அதன் மூலம் சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

MSME தொழில் நிறுவ னங்கள் எளிதாக தொழில் தொடங்க, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் 43,056 தொழில் முனைவோர்களின் ரூ.7,894 கோடி கடனுக்கு, தமிழ்நாடு அரசு ரூ.750.74 கோடி கடன் உத்தரவாதம் வழங்கி உள்ளது. TN TReDS திட்டத்தின் கீழ் 34,557 விலைப்பட்டியல்களுக்கு ரூ.5,171.91 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சமச்சீர் தொழில் வளர்ச்சியை கொண்டு வருவதற்காக 12 மாவட்டங்களில் ரூ.387 கோடி மதிப்பீட்டில், 697.81 ஏக்கர் பரப்பளவில், 17 சிட்கோ தொழில்பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 14 மாவட்டங்களில் 543.31 ஏக்கர் பரப்பளவில் ரூ.419.58 கோடி மதிப்பீட்டில் 16 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

PMFME திட்டத்தினை தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்தியமைக்காக குடியரசு தலைவர் அவர்கள் விருது வழங்கி பாராட்டியுள்ளார். ஒன்றிய அரசு வெளியிட்ட தர வரிசை பட்டியலில்Start up TN நிறுவனம் இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை பெற்றுள்ளது.

உண்மைக்குப் புறம்பு!

கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில், ரூ.3,617 கோடி நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், முதல்வர் அவர்கள் MSME துறையின் வளர்ச்சிக்கு தனி கவனம் செலுத்தி, 5 ஆண்டுகளில், ரூ. 6,625 கோடி நிதி ஒதுக்கி சாதனை படைத்துள்ளார். ஆளுநர் அவர்கள் MSME துறையை தமிழ்நாடு அரசு புறக்கணித்துள்ளது என உண்மைக்கு புறம்பாக கூறியுள்ளார்.

இந்தியாவில் மற்ற மாநிலங்களும் பின்பற்றும் வகையில், முதல்வர் அவர்களால் செயல்படுத்தப்பட்ட சிறப்பான திட்டங்களால் பொருளாதார வளர்சியில் குஜராத், மகாராஷ்ரா மாநிலங்களை பின்னுக்கு தள்ளி இந்தியாவிலேயே தமிழ்நாடு இரட்டை இலக்க வளர்சியான 11.19 சதவீதம் பெற்று முதல் இடத்தில் உள்ளது.

தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்து கொண்டே தமிழ்நாட்டின் வளர்ச்சியை அறியாமல் ஒரு எதிர்கட்சி தலைவர் போல் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு அறிக்கையை வெளியிடுவது ஆச்சரியமாக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் மாளிகையிலிருந்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்

இந்து சமய அறநிலையத்துறை தொடர்பான குற்றச்சாட்டு தவறானது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்க அறிக்கை!

சென்னை, ஜன.21

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று (20.01.2026) நடைபெற்ற ஆளுநர் உரை நிகழ்வு தொடர்பாக தமிழ்நாடு மக்கள் மாளிகையிலிருந்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அறங்காவலர்கள் நியமனம்:

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமனம் செய்திட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் 8,488 திருக்கோயில்களில் பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 31,163 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அறிவிப்பாணைகள் வெளியிடப்பட்டதில் 13,340 திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற விண்ணப்பங்கள் தற்போது அந்தந்த மாவட்டக்குழுக்களின் பரிசீலனையில் உள்ளன.

இதர 17,823 திருக்கோயில்களுக்கு அறங்காவலர் நியமனம் தொடர்பாக எவ்வித விண்ணப்பமும் பெறப்படவில்லை. பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாக 1,551 திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமனம் செய்ய இயலவில்லை.

அறங்காவலர்கள் நியமனம் செய்வது தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள், அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்திகரமாக உள்ளதாக தெரிவித்து பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் மாவட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 27 வருவாய் மாவட்டங்களில் 2வது முறையாக மாவட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அறங்காவலர்களுக்கு உதவியாக 3,290 திருக்கோயில்களில் மட்டும் சட்டப்பிரிவு 45(1)ன் கீழ் செயல் அலுவலர்கள் நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்ற திருக்கோயில்கள் அறங்காவலர்கள் அல்லது தக்கார் (Fit Person) மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

அனைத்து திருக்கோயில்களிலும் அறங்காவலர்களை நியமிக்க அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும் விண்ணப்பங்கள் வராததே பல திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் தாமதமாவதற்கு முக்கிய காரணமாகும்.

தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்தல் :

சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திட 14 உறுப்பினர்களைக் கொண்ட மாநில வல்லுநர் குழுவையும் மண்டல அளவில் மண்டல வல்லுநர் குழுக்களையும் அமைப்பதற்கும் 11.03.2022 அன்று ஆணைகளை பிறப்பித்துள்ள தோடு, வரைவு பாதுகாப்பு கையேட்டையும் (Conservation Manual) வெளியிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்கள் முறையாக பின்பற்றப்பட்டு, மாநில வல்லுநர் குழுவால் இதுவரை 14,804 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு ரூ.425 கோடி அரசு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ஆயிரம் ஆண்டுகள் பழமையான 76 திருக்கோயில்கள் உட்பட 3,956 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

100 முதல் 400 ஆண்டுகள் வரை குடமுழுக்கு காணாத பழமை வாய்ந்த திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தியும், பழுதடைந்து ஓடாமல் நின்றிருந்த திருத்தேர்களை மீண்டும் ஓடச் செய்தும், சிதிலமடைந்த திருக்குளங்களைச் சீரமைத்துத் தெப்ப உற்சவங்களை மீட்டெடுத்தும் சாதனை படைத்து வருகிறது திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு அரசின் இத்தகைய ஆக்கப்பூர்வமான பணிகளை ஆதீனப் பெருமக்களும் சான்றோர்களும் பாராட்டி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் சீர்மிகு நடவடிக்கைகளால் முன்னெப்போதும் இல்லாத வகையில் திருக்கோயில்கள் புதுப்பொலிவு பெற்றுள்ளதோடு, பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டு சமய பெரியோர்கள், ஆன்றோர்கள், இறையன்பர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, மனநிறைவை அளித்துள்ளது என்பதே நிதர்சனமாகும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவூர் ஊராட்சி தி.மு.க சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் ஏற்பாட்டிலும் ஊராட்சி மன்றத் தலைவர் பா.சுதாகர் தலைமையிலும் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கோலப் போட்டி மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 3,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார். அருகில் கழக பேச்சாளர் சைதை சாதிக் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. மகனும் சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளருமான வழக்கறிஞர் தமிழ்வேல், தன்னுடைய பிறந்தநாளையொட்டி குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

மினி பேருந்து சேவை

முதல்வரிடம் கல்லூரி மாணவி வைத்த கோரிக்கை உடனடியாக நிறைவேற்றம்!

மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜன.21

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் இருந்துஆரணி வரை போதிய பேருந்து வசதிகள் இல்லாததால் தங்கள் பகுதிக்கு மினி பேருந்து இயக்க வேண்டும், என கடந்த 9 ஆம், தேதி பாடியநல்லூரில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் உங்கள் கனவை சொல்லுங்கள் திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார், அப்போது ஆரணி பகுதியைச் சேர்ந்த பிரியங்கா என்ற கல்லூரி மாணவி தங்கள் பகுதிக்கு போதிய பேருந்துகள் இயக்கப் படுவதில்லை எனவும், இதனால் பள்ளி கல்லூரிகளுக்கு சென்று வரும் மாணவ மாணவிகள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலை உள்ளதாகவும் எனவே மினி பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வைத்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டதன் பேரில்

புதிதாக பொன்னேரி-ஆரணி வழித்தடத்தில் மினி பேருந்து சேவையை தொடக்க விழா நடைபெற்றது. இதில் திருவள்ளுவர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு' கொடி அசைத்து மினி பேருந்து சேவையை தொடங்கி வைத்தார், அப்போது கல்லூரி மாணவி பிரியங்கா தனது கோரிக்கையை ஏற்று மினி பேருந்து சேவையை அறிவித்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்குமாறு அவரிடம் கூறினார்,

இந்த நிகழ்ச்சியில் பொன்னேரி தொகுதி திமுக தேர்தல் பார்வையாளர் சுரேஷ்குமார் சோழவரம் மேற்கு ஒன்றிய செயலாளர் வே.ஆனந்தகுமார், மீஞ்சூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜா, பொன்னேரி நகர செயலாளர் வழக்கறிஞர் ரவிக்குமார், முன்னாள் மாவட்ட பிரதிநிதி வல்லூர் ப.து.தமிழரசன், டி.கே.முனி வேல்,

நகர இளைஞரணி அமைப்பாளர் மா.தீபன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராஜாராம், தச்சூர் ஓ.தசரதன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.